**கூட்டுப் பத்திரிகைச் செய்தி**

*2016 நவம்பர் 05 ஆந் திகதி*

இந்தியாவும் இலங்கையும் புதுடில்லியில் 2016 நவம்பர் 05ஆந் திகதியாகிய இன்று மீனவர்களின் விடயங்கள் பற்றிய அமைச்சர்கள் மட்டத்திலான உரைகளை நிகழ்த்தியுள்ளன. இந்திய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திருமதி சுஸ்மா சுவராஜ் அவர்களும் கமத்தொழில் மற்றும் கமக்காரர்கள் நலனோம்பல் அமைச்சர் திரு. ராதாமோகன் சிங் அவர்களும் இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர மங்கள சமரவீர அவர்களையும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் திரு. திரு. மஹிந்த அமரவீர அவர்களையும் சந்தித்துள்ளனர். வீதிப்போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பற்சேவை இராஜாங்க அமைச்சர் திரு. பொன் ராதா கிருஷ்ணன் அவர்களும் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம்.ஏ. சுமந்திரன் அவர்களும் இரண்டு பேராளர் குழுக்களின் பங்குபற்றியவர்களாகவிருந்தனர்.

அமைச்சர்கள் மீனவர்களின் விடயங்கள் தொடர்பில் நிரந்தரமான தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு உதவுவதற்கான சாத்தியமான பொறிமுறைகள் மீது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டுள்ளனர்.

அவர்கள் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு தடவை மீன்பிடி மீதான கூட்டமொன்றை நடாத்துவதற்கான கூட்டு தொழிற்படு குழுவொன்றை நியமிப்பதற்கும் கடற்றொழில் அமைச்சர்களுக்கிடையில்; ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் ஒரு தடவை கூட்டமொன்றை நடாத்துவதற்கும் உடன்பட்டுள்ளனர். இப்பேராளர் குழுக்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுகளின் பிரதிநிதிகளையும் கடற்கரையோரப் பாதுகாப்பு படைகளின் பிரதிநிதிகளையும் கற்படைகளின் பிரதிநிதிகளையும் கொண்டிருக்கும். 1வது அமைச்சர் மட்டத்திலான கூட்டம் கொழும்பில் 2017 சனவரி 02 ஆந் திகதியன்று நடாத்தப்படும்.

கூட்டுத் தொழிற்படுதொகுதியின் தொடர்பு விடயங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும் (i) முடிந்தவரை ஆழமான வலை வீசி மீன்பிடித்தல் நடைமுறையை முடிவுறுத்தும் இடைப்போக்கை துரிதமாக மேற்கொள்ளுதல் (ii) கைது செய்யப்படும் மீனவர்களைக் கையளிப்பதற்கான தரமான தொழிற்படு நடைமுறைகளுக்கான வழிவகைகளை தயாரித்தல் மற்றும் (iii) ரோந்து புரிதல் மீதான ஒத்துழைப்பிற்கான சாத்தியக்கூறுகளை ஆய்ந்தறிதல். தடுத்து வைத்திருக்கப்படும் கப்பல்களை விடுவித்தல் விடயம் பற்றி முதலாவது கூட்டு தொழிற்படு குழுவின் கூட்டத்தில் கலந்துரையாடப்படும்.

இரண்டு அரசாங்கங்களும் இரண்டு கடற்கரையோர காவல் படைகளுக்குமிடையே உடனடி நேரடித் தொடர்பு தொலைபேசி வசதியை நிறுவுவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளன.

மீனவர்களுக்கு தொடர்பாடல் சோடித்தடத்தொகுதிகளின் வழங்கலை துரிதப்படுத்துவதற்கு ஆதரவு நிலவியுள்ளது.

மீனவர்கள் இரண்டு நாடுகளின் கடற்படைகளும் கடற்கரையோரக் காவற்படைகளும் கையாளுகின்ற முறைகள் மூலம் எந்த வன்செயலும் உயிரிழப்பும் ஏற்படலாகாதென மீனவர்கள் சங்கங்களினால் விடுவிக்கப்பட்ட கோரிக்கைக்கு இரண்டு அரசாங்கங்களும் உடன்பாடு தெரிவித்துள்ளன.

அமைச்சர்கள் புதுடெல்லியில் 2016 நவம்பர் 02ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டத்தில் இந்த இரண்டு நாடுகளின் மீனவர்கள் சங்கங்களை ஒவ்வொரு ஆறுமாதங்களுக்கும் ஒரு தடவை சந்தித்து தங்களுடைய உரையாடல்களை அவர்கள் நிகழ்த்துவதற்கு ஊக்குவிப்பு வழங்குவதற்கும் உடன்பட்டுள்ளனர்.

தற்போது இரண்டு தரப்புகளில் ஒவ்வொன்றினாலும் கட்டுக்காப்பில் வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றமையையும் பற்றி அமைச்சர்கள் கவனத்திற்கு எடுத்துக் கொண்டுள்ளனர்.